## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆஸ்திரிய செயற்திட்ட நிதியத்திலிருந்து 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 2,084,556,810 பெறுமதியான கட்டிடம், பயிற்சி உபகரணங்கள் மற்றும் கற்பனைச் சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படாமல் வெளிப்படுத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆஸ்திரிய செயற்திட்டத்தில் இருந்து கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்குக் கிடைத்த சொத்துக்கள் 2022.12.31 ஆம் திகதி வரையிலும் போதியளவான தகவல்கள் இல்லாமையினால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்ற சகல சொத்துக்களையும் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது பயிற்சி நடவடிக்கைகளுக்காக நன்கொடையாகக் கிடைத்த மோட்டார் வண்டியின் இறக்குமதிப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது அந்த வாகனத்தின் தேறிய பெறுமதியான ரூபா 1,256,152 இனால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் அதிகரித்தும் மூலதன மானியம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வாகனத்தின் ரூபா 2,405,534.00 ஆன இறக்குமதி பெறுமதி பயிற்சி உபகரணங்கள் மற்றும் மூலதன பெறுவனவு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி உபகரணமாக கிடைக்கப்பெற்ற மோட்டார் வாகனத்தின் இறக்குமதிப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 5,280,000 ஆன 03 காணிகளின் பெறுமதி மற்றும் முல்லைத்தீவு மற்றும் கம்ஹாவில் அமைந்துள்ள 167.5 பேர்ச் அளவான இரண்டு காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து தவறவிடப்பட்டிருந்த உரிமை தன்மை அதிகாரத்திற்குச் சொந்தமான யாழ்ப்பாண காணி, கட்டுநாயக்க விடுதி மற்றும் கட்டுபெத்த உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி என்பவற்றை 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட ரூபா 341,726,574 பெறுமதியான காணி மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் உரியதாக பெறுமானத் தேய்வு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் திரண்ட மிகை ரூபா 3,261,884 வீதமும், காணி ரூபா 6,523,768 இனாலும் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டிற்காகவும் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காகவும் கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு இலக்கம் 534 நாட்குறிப்பில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணிகளை பெறுமானத் தேய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 500 டெப் இயந்திரங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனத்தால் டெப் இயந்திரத்திற்காக சரியான பட்டியல் வழங்கப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | 2017 முதல் 2022 காலப் பகுதியில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 06 ஒப்பந்தங்களில் ரூபா 1,495,555 முற்பணத் தொகை மூலதனமாக்கப்படாமை மற்றும் கூட்டுமொத்தமான ரூபா 20,103,595 ஆன முற்பண தீர்த்தல் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 21,599,150 இனால் அதிகரித்தும், கட்டிடப் பெறுமதி ரூபா 1,495,555 இனாலும் நடைமுறை வேலைகள் பெறுமதி ரூபா 20,103,595 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | பூர்த்திசெய்யப்பட்ட ரூபா 1,495,555 ஆன நிர்மாணம் இந்த ஆண்டில் மூலதனமாக்கப்படும். | வேலை பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதிகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அதிகார சபைக்கு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த சான்றிதழ் பத்திரங்களுக்காக அந்த ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய ரூபா 20,638,200 தொகை மற்றும் அச்சிடல் நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,960,200 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகளில் இந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 31,813,587 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 22,300,913 ஆனமையால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீட்டின் மீதி ரூபா 9,512,675 இனால் முறையே குறைத்தும் மற்றும் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரியாக கணக்கீடு செய்யப்படும். | ஆண்டிற்குரிய பணிக்கொடை சரியாக கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | 100,000 தொழில் தேடுபவர்களுக்கு பயிற்சி அளித்தல் "Multi-Purpose Development Task Training Programme" அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்திலிருந்து 2022 ஆம் ஆண்டின் போது கிடைக்க வேண்டிய ரூபா 41,574,974 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய பணம் கோரப்பட்ட போதும் அந்தப் பணம் இந்த படையணியின் மூலம் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் வரை வழங்க முடியாதிருந்தமையால் கணக்கீடு செய்யப்படவில்லை. | ஆண்டிற்குரிய சகல பெறவேண்டியவைகள் உரிய ஆண்டில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலப் பகுதியில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 12,612,299 கூட்டுத் தொகையான கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 10,093,619 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 31,396,431 கடன்பட்டோர் மற்றும் கூட்டுமொத்தமாக ரூபா 3,348,035 ஆன கடன்கொடுத்தோர் மீதி என்பவற்றை அறவிடுவதற்கோ அல்லது தீர்த்துவைப்பதற்கோ தவறியிருந்தது. | இந்த கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் மீதியை பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட 02 வருடங்களை விஞ்சிய காலமாக காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 30,404,624 ஆன செலுத்த வேண்டியவைப்பு மீதி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்தி விடுவிக்கக்கூடிய மீதிகளை விரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2020/02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக 2020 சனவரி 04 ஆம் திகதி முதல் பணிப்பாளர் நாயக பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்த்து சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 694,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பத்திரிகை அறிவித்தல் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு ரூபா 86,865 தொகை ஆரம்ப சம்பளம் உரித்து காண்பிக்கப்பட்ட போதும் ஆட்சேர்த்தல் பணிப்பாளர் நாயகத்திற்கு அவருக்கு இதற்கு முன்னர் பெறப்பட்ட சம்பளத்திற்கு ஒத்ததாக ரூபா 109,565 அடிப்படை சம்பளமொன்று நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரை மற்றும் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவருக்கு மாதாந்த தொழில் தகைமைப்படியொன்றுடன் ரூபா 37,700 மிகை தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,715,737 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 57,777,077 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 64,492,813 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்க மூலதன மானியம் கணக்கு வைத்தல் முறைமை மாற்றம் அடைந்தமை, அமைச்சின் நிதிஏற்பாடு அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

அ. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது திறன் மாணவர்களுக்காக கிடைத்த மானியம் 149 சதவீதத்தாலும் ஏனைய வருமானம் 89 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக கிடைத்த மானியம் 82 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

ஆ. 2022 ஆம் ஆண்டின் போது புதிய மானிய பெறுவனவாக வரிசை அமைச்சிலிருந்து ரூபா 41,130,789 ஆலோசனை செயலாற்றல் படியாக கிடைத்திருந்தது.

இ. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பதவி அணியினர் கிரயம் 81 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் நிதி மற்றும் ஏனைய செலவினம் 48 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. சராசரியாக எடுக்கும் போது செயற்பாட்டுக் கிரயம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 13.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 111 லெப்டொப் கணனிகள் கடமை தேவைகள் மற்றும் பதவியின் தன்மையை கவனத்தில் கொள்ளாமல் 103 உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட பெயர்களில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. 04 உத்தியோகத்தர்களுக்கு 02 கணனிகள் வீதமும், இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 03 கணனிகள் வீதமும் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபையின் லப்டொப் மற்றும் டெப் இயந்திரங்கள் அதிகளவில் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் அதனை பெற்றுக் கொண்டு மீள கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையினை சரியாக இணங்கண்டு கொள்வனவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் கொள்வனவு செய்ய வேண்டியிருந்த சொத்துக்கள் மிகவும் செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் அச்சிடல் நடவடிக்கைகளுக்காக 11 பேர்களை உடைய பதவியணியினர் மற்றும் ரூபா 10,923,635 பெறுமதியான இயந்திர | இந்தக் காலத்தில் மூலப் பொருட்களின் விலை மிகவும் உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தமை மற்றும் கட்டளைகளுக்கு மேலதிகமாக | அதிகார சபையின் வளங்களை ஆகக் கூடிய செயற்திறனாக பயன்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களுடன் தனியான அச்சிடல் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அச்சிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 9,134,700 தொகை வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சிறு அச்சிடல்கள் மாவட்ட அலுவலகங்களில் இருந்து கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 8,960,200 கட்டளை ஒன்று கூறு விலை கோரி வெளித்தரப்பினரிடமிருந்து மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அச்சகத்தின் செயற்திறனை கட்டியெழுப்புவதற்கும், வெளித்தரப்பினரிடமிருந்து அச்சிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (இ) | பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 100,000 தொழில் தேடுபவர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 100,835,305 செலவிடப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட தொழில் வாய்ப்பு 35 சதவீதம் அதாவது 34,660 பேர் மாத்திரம் பயிறிசியினை பூர்த்தி செய்திருந்தனர். இந்த செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 4,650,800 செலவிடப்பட்டு தகவல் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இதன் மூலம் தொழில் தேடுபவர்களுக்கு வேலை வாய்ப்பு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இந்த செயற்திட்டத்தின் கீழ் 100,000 தொழில் தேடுபவர்களை பயிற்றுவிப்பதற்கு இலக்கிடப்பட்ட போதும் முதலாவது கட்டத்தில் பயிற்சி வெற்றிகரமாக பூர்த்திசெய்த தொழில் தேடுபவர்கள் 34,660 பேர்களுக்காக 2023.08.31 ஆந் திகதி வரையில் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களின் செயலாற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கைத்தொழில் ஒத்துழைப்பு பயிலுனர் பயிற்சி நிலையத்தின் கீழ் Higher Diploma in Digital Technician பாடநெறிக்காக ஆய்வுகூடமொன்றை ஸ்தாபிப்பதற்காக 2021 நவம்பர் 19 ஆந் திகதி தூதுவர் அலுவலகத்தின் மூலம் சீன தூதுவர் அலுவலகத்தின் மூலம் ரூபா 10,099,202 பெறுமதியான 84 விடயங்கள் நன்கொடையாக கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய | Higher Diploma in Digital Technician என்ற பாடநெறி ஆரம்பிப்பதற்கு தேவையான ஆய்வுகூட வசதிகள் 2022.04.22 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் அந்த பாடநெறி ஆரம்பிக்கப்படும். | செயலாற்றலை அபிவிருத்தி செய்வதற்காக கிடைக்கின்ற நலன்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிப்பதற்கும் மற்றும் கணனி ஆய்வு கூடத்தை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | முன் பயிற்சி மதிப்பீட்டு செயற்பாடுகள் (RPL) சான்றிதழ் பத்திரங்கள் 5000 பகிர்ந்தளிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்ற திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் போது இடம் பெற்ற மோசடி தொடர்பாக நடைபெற்ற விசாரணைகளுக்கு உரிய பரிந்துரைகள் 2023 ஆம் ஆண்டு வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 101.9 மில்லியன் செலவிடப்பட்ட போதும் ரூபா 66.41 மில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன். மிகுதி ரூபா 35.5 மில்லியன் கிடைக்க வேண்டிய மிகுதியாக இனங்காணப்பட்டிருந்தது. ரூபா 5.5 மில்லியன் ஹொல்சிம் நிறுவனத்திடம் இருந்து கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மிகுதி ரூபா 29.9 மில்லியன் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல் விரைவுபடுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்கு முரணாக நபர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு அனுப்புவதற்கு 2022 ஆம் ஆண்டின் போது தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையினால் NAITA Foreign Employment (Private) Limited பெயரில் கம்பனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வெளிநபர்களிடமிருந்து ரூபா 1.2 மில்லியன் பெறப்பட்டிருந்த போதும் 2023 ஒக்டோபர் 15 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு நபரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. இந்த கம்பனியின் வருமானம் மற்றும் செலவினம், கட்டுப்பாட்டு கணக்குகளின் மூலம் அதிகாரசபையின் பிரதான வங்கிக் கணக்கு ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் | தற்போது அந்த கம்பனி முழுமையாக செயல் இழந்த நிலையில் காணப்படுகின்றது. கம்பனியால் ரூபா 1.2 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்ட போதும் எந்த ஒரு நபரும் இதுவரையிலும் வெளிநாடு சென்றிருக்கவில்லை.<br><br>2022 ஆம் ஆண்டிற்குரிய போதியளவான கொடுக்கல் வாங்கல்கள் இல்லாதிருந்ததுடன் கட்டுப்பாட்டு கணக்கு ஊடாக சகல செலவினம் மற்றும் வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதன் நோக்கத்தை அமுல்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறே செயல் இழந்த நிலையில் காணப்படுகின்ற முகவராண்மையின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக லெுத்தப்பட்ட பணம் அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு இந்த கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 608,385 ஆக இருந்தது. இந்த கம்பனி முழுமையாக செயலிழந்த நிலையில் காணப்பட்ட போதும் 2023 ஆம் ஆண்டிற்காகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்காக ரூபா 224,000 வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தொழில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு மாணவர் உதவி தொகை செலுத்துவதற்காக கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற நிதிஏற்பாட்டை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமையின் காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபைக்கு கிடைத்த கூட்டுமொத்தமான ரூபா 55,266,600 தொகையில் ரூபா 10,279,600 மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நடைமுறை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அமைச்சில் இருந்து நிதிப் பெறுவனவு கிடைத்தல் மற்றும் பயிலுனர்களுக்கு செலுத்துதல் தொடர்பான விபரங்கள் கிடைத்தலின் தாமதத்தினால் 2022 இற்குரிய பயிலுனர் படி இந்த ஆண்டின் போது செலுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் அவற்றை 2023 ஆம் ஆண்டில் முதல் அரை பகுதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மாணவர் உதவி தொகை தாமதமின்றி அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திறன் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மூலதன செலவினங்களை செய்வதற்காக 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைத்த தொகையில் ரூபா 62,789,505 உரிய நோக்கங்களுக்காக செலவிடப்படாமல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | திறன் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு கிடைத்த ரூபா 62,789,505 தொகை மூலதன நிதியேற்பாடாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கிடைக்கின்ற நிதியை உச்ச அளவில் செயற்திறனாக உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துதல் வேண்டும். |